# PRIMARY SCHOOL
# END-OF-YEAR EXAMINATION

## TAMIL LANGUAGE

## *PRIMARY 6*

Name : ________________ (   )

Class : Primary (   )

Date :

**INSTRUCTIONS TO CANDIDATES**

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL QUESTIONS.

| MAXIMUM MARKS | MARKS OBTAINED |
|---|---|
| | |

P6 PRELIMINARY
TESTPAPER 6

பெயர்: ____________ வகுப்பு: 6

தேதி: ________

## தாள் 1 - கட்டுரை

**இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும் கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிடவேண்டாம்.**

வினா 1

### என் மனதைத் தொட்ட ஒரு பத்திரிகைச் செய்தி

நாம் அன்றாடம் செய்தித்தாளில் பல செய்திகளை வாசிக்கிறோம். சில செய்திகள் நம் மனதை விட்டு அகலாமல் இருக்கும். அவ்வாறு நீ படித்த பத்திரிகைச் செய்தி ஒன்று உன் மனதைத் தொட்டு இருக்கலாம். அந்தச் செய்தியை விவரித்து **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு உன் அண்டைவீட்டாருக்கு நீ செய்த ஓர் உதவியைப் பற்றி விவரித்து ஒரு கட்டுரை எழுது.


கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களை நீ கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

- உன் மனதைத் தொட்ட அந்தச் செய்தி யாது?
- செய்தி இடம் பெற்ற சம்பவம் எங்கே, எப்போது நடந்தது?
- இச்செய்தி உன் மனதைத் தொடக் காரணம் என்ன?
- இந்தச் செய்தியிலிருந்து நீ என்ன கற்றுக் கொண்டாய்?

# P6 PRELIMINARY
# TESTPAPER 6

*வினா 2*

*கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.*




அக்காவும் தம்பியும்

இருக்கை

தொங்கும் கைப்பிடி

குறும்புக்கார சிறுவர்கள்

பெருவிரைவு ரயில் வண்டி நிலையம்

காத்துக் கொண்டிருந்தனர்

நீளமான கைப்பிடி

அறிவுரை

**'அ' பிரிவு**

**P6 PRELIMINARY TESTPAPER 6**

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் மிகவும் முன் கோபக்காரன். தன் கெட்ட குணம் தெரிந்தும் (Q1) ________________ அதை மாற்றிக் கொள்ள முடியவில்லை. ஒரு நாள் தேவதை ஒன்று அவன் முன் தோன்றியது. அது பொன்னால் செய்த ஒரு குவளையை Q2) ________________ கொடுத்தது. "உனக்குச் சினம் வரும் போதெல்லாம் (Q3) ________________ மூன்று முறை தண்ணீர் நிரப்பிக்குடி; பிறகு சினமே வராது" என்று கூறி மறைந்தது தேவதை. அன்றிலிருந்து அரசன் அப்படிச் செய்யத் தொடங்கினான். சில நாட்களில் அவன் சினம் அவனை விட்டு விலகியது. பல நாட்கள் சென்றன. மீண்டும் ஒரு நாள் தேவதை அவன்முன் தோன்றியது. மன்னன் (Q4) ________________ ஆளாகாமல் இருப்பதற்கு உதவிய தேவதைக்கு அவன் நன்றி கூறித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான் மன்னன். "அரசே! (Q5) ____________ ஏமாற்ற நான் விரும்பவில்லை. அது மந்திரக்குவளை அல்ல. சாதாரணமானதுதான். சினம் வரும்போது சிந்திக்க நேரம் இருக்காது. சிந்தனை வந்தால் சினம் தானே குறையும். இந்த (Q6) ________________ மூன்று முறை தண்ணீரை ஊற்றிக் குடிக்கும் போது நேரம் கிடைக்கிறது. அப்போது சிந்திக்க முடிவதால் புலன்கள் அமைதி பெறுகின்றன. ஆத்திரம் நியாயத்திற்கு இடம் கொடுக்கிறது" என்று கூறி மறைந்தது தேவதை.

Q1. (1) அவனுக்கு
(2) அவன்
(3) அவனுடன்
(4) அவனால்

Q2. (1) அரசனை
(2) அரசனின்
(3) அரசனிடம்
(4) அரசனோடு

Q3. (1) இதில்
(2) இதற்கு ( )
(3) இதலிருந்து
(4) இதனை

Q4. (1) கடுங்கோபத்தால்
(2) கடுங்கோபத்திற்கு
(3) கடுங்கோபத்தின் ( )
(4) கடுங்கோபத்தை

Q5. (1) உனது
(2) உன்னால்
(3) உனக்கு ( )
(4) உன்னை

Q6. (1) குவளையால்
(2) குவளையின்
(3) குவளைக்கு ( )
(4) குவளையிலிருந்து

A2 செய்யுள் / பழமொழி

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் /பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

Q7. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
_____________ எல்லாம் மழை.

(1) கொடுப்பதூஉம
(2) படைப்பதூஉம்
(3) எடுப்பதூஉம்
(4) கேட்பதூஉம்

( )

Q8. கற்றது கைமண்ணளவு கல்லாதது ___________.

(1) மனத்தளவு
(2) உலகளவு
(3) வாயளவு
(4) வானளவு

( )

Q9. ___________ அழகு வரும்பொருள் உரைத்தல்.

(1) மந்திரிக்கு
(2) செல்வர்க்கு
(3) அறிஞர்க்கு
(4) வணிகருக்கு

( )

Q10. குணம்நாடி _____________ நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

(1) ஏற்றமும்
(2) குற்றமும்
(3) முற்றமும்
(4) சுற்றமும்

( )

Q11. நிழலின் ______________ வெயிலில் தெரியும்.

(1) வறுமை
(2) தன்மை
(3) பெருமை
(4) அருமை

( )

Q12. கைப்பொருள் தன்னின் ______________ கல்வி.

(1) பாடப்பொருள்
(2) மெய்ப்பொருள்
(3) மென்பொருள்
(4) அகப்பொருள்

( )

<u>B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

சாரா என்பவள் எட்டு வயதுச் சிறுமி. அவளுக்கு டிம் என்ற தம்பி ஒருவன் இருந்தான். அவனுடைய மூளையில் ஒரு கட்டி இருந்தது. ஒரு நாள் டிம்மைப்பற்றிப் பெற்றோர் பேசிக்கொண்டிருப்பதை அவள் கேட்டாள். "டிம்முக்குச் சிகிச்சை அளித்ததில் நம் சேமிப்பு யாவும் தீர்ந்துபோய்விட்டது; பலரிடமும் கடன் வாங்கியிருக்கிறோம். அவனுக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்தாலன்றி அவனைக் காப்பாற்றுவது கடினம் என்று மருத்துவரும் கூறிவிட்டார். அதற்கு அதிகப் பணம் தேவைப்படும். நம்மிடத்திலோ பணம் இல்லாததால் நம் வீட்டை விற்றுவிட வேண்டியதுதான்," என்று, சாராவின் தந்தை மிகவும் கவலையுடன் அவள் தாயாரிடம் கூறினார். "இனி ஓர் <u>அதிசயம்தான்</u> டிம்மை காப்பாற்ற முடியும்," என்று அழுதுகொண்டே கூறினார் அவள் தாயார். சாரா உடனே தன் அறைக்கு சென்று தான் சேமித்து வைத்திருந்த பணத்தை எண்ணிப் பார்த்தாள். பணத்தை சட்டைப் பையில் வைத்துக்கொண்டு யாருக்கும் தெரியாமல் வீட்டின் பின்வழியாக வெளியேறி அடுத்த தெருவில் இருக்கும் மருந்தகத்திற்கு விரைந்தாள்.

அங்கிருந்த மருந்தகர், நீண்ட நேரமாக ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் கவனத்தை ஈர்க்க சாரா பலவாறு முயன்றாள். ஆனால், மருந்தகர் அவளைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. சாரா தன் சட்டைப் பையிலிருந்து பத்து காசை எடுத்து மேசையின் மீது தட்டினாள். உடனே மருந்தகர் திரும்பி," உனக்கு என்ன வேண்டும் ? நீண்ட காலம் பாரக்காத என் தம்பியிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்,"என்று ஆத்திரத்துடன் கூறினார். சாராவும் கோபத்துடன் ,". நானும் என் தம்பியைப் பற்றித்தான் உங்களிடம் பேசவேணடும். அவன் உடல் நலமில்லாமல் இருக்கிறான். அதனால், எனக்கு ஓர் அதிசயம் வேண்டும்.," என்றாள். " என்ன அதிசயமா?" என்று வியப்புடன் கேட்டார் மருந்தகர். "ஆம், என் தம்பியின் மூளையில் ஒரு கட்டி இருக்கிறது. ஓர் அதிசயம்தான் அவனைக் காப்பாற்றமுடியும் என்று என் தாயார் கூறினார்," என்றாள் சாரா. " அதிசயம் என்ன விலை? என்னிடம் பணம் இருக்கிறது. அது போதவில்லையென்றால் மீதிப் பணத்தை எப்படியும் கொடுத்துவிடுவேன்," என்றாள் சாரா. "சிறுமியே, என் மருந்தகத்தில் அதிசயங்கள் இல்லை; என்னால் உனக்கு உதவமுடியாது. என்னை மன்னித்துவிடு," என்று இம்முறை *கனிவுடன்* கூறினார் மருந்தகர்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மருந்தகரின் தம்பி, சாராவின் அருகில் சென்று, " உன் தம்பிக்கு எந்த *மாதிரியான* அதிசயம் வேண்டும்?" என்று கேட்டார். உடனே சாராவின் கண்கள் குளமாகின. "என் தம்பியைக் குணப்படுத்தும் அதிசயம் வேண்டும்," என்றாள். தன் பெற்றோர் பேசியவற்றை ஒன்றுவிடாமல் அவரிடம் கூறினாள். அவர், "உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?" என்று தொடர்ந்து கேட்டார். "ஒரு வெள்ளி பதினொரு காசு," என்றாள் சாரா. " ஓ! உன்னிடம் இவ்வளவு பணம் இருக்கிறதா? இது போதுமே, உன் தம்பிக்கு அதிசயத்தை வாங்க. வா, உன் வீடு எங்கே இருக்கிறது என்று

காட்டு. உன் தம்பிக்கு வேண்டிய அதிசயம் என்னிடம் இருக்கிறதா என்று பார்ப்போம்," என்றார்.

அந்த மருந்தகரின் தம்பிதான் டாக்டர் கார்ல்டன் ஆர்ம்ஸ்ராங். அவர் ஒரு மூளை *நிபுனர்.* அவர் டிம்முக்கு இலவசமாகவே அறுவைச் சிகிச்சை அளித்து அவனைக் காப்பாற்றினார். சில நாள்கள் கழித்து சாராவின் பெற்றோர் நடந்தவற்றைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது சாராவின் தாயார் ," அந்த அறுவைச் சிகிச்சைக்கு எவ்வளவு பணம் செலவாகியிருக்குமோ தெரியவில்லையே?" என்றார். உடனே சாரா," ஒரு வெள்ளி பதினொரு காசு," என்று சிரித்துக்கொண்டே கூறினாள். ஆனால், அதன் உண்மையான விலை, சாரா தன் தம்பியின்மீது வைத்திருந்த அன்புதான்.

**Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q13. சாராவின் பெற்றோரை வாட்டும் பிரச்சனை யாது?

(1) அவர்களது சேமிப்பு தீர்ந்துவிட்டது.
(2) வாங்கிய கடனை அடைக்க இயலாதது.
(3) தங்களது மகனை நோயிலிருந்து பிழைக்க வைப்பது.
(4) அதிக விலையில் தங்களது வீட்டை விற்பது.

( )

Q14. "இனி ஓர் <u>அதிசயம்தான்</u> டிம்மை காப்பாற்ற முடியும்," என்ற தொடரில் 'அதிசயம்' என்ற சொல் எதைக் குறிக்கிறது.

(1) மருந்தகரின் உதவி
(2) சாரா சேமித்த பணம்
(3) எதிர்ப்பாராத உதவி
(4) உடனடி அறுவை சிகிச்சை

( )

Q15. மருந்தகர் ஏன் எரிச்சலுடன் சாராவிடம் பேசினார் ?

(1) சாரா பத்து காசுடன் விளையாடியதால்
(2) சாரா மருந்தகத்தில் இல்லாத பொருளைக் கேட்டதால்
(3) அவள் கேட்கும் கேள்வியை புரிந்துகொள்ள இயலாததால்
(4) மருந்தகர் பேசிக்கொண்டிருக்கையில் சாரா குறுக்கிட்டதால்

( )

Q16. டாக்டர் ஆர்ம்ஸ்ராங் சாரா கேட்கும் அதிசயத்தை எப்போது புரிந்துகொண்டார்?

(1) சாரா கண்களங்கிய போது
(2) சாரா தன் பெற்றோர் பேசியவற்றை கூறியபோது
(3) சாரா டாக்டர் ஆர்ம்ஸ்ராஙை வீட்டிற்கு அழைத்து சென்றபோது
(4) சாரா தன் சேமிப்பை காண்பித்தபோது

( )

Q17. டிம் எதனால் இலவச சிகிச்சையை பெற்றான்?

(1) சாரா தன் தம்பியைப் பற்றிக் கூறியதால்
(2) சாரா டிம்மின் மீது கொண்டிருந்த பாசத்தால்
(3) டாக்டர் ஆர்ம்ஸ்ராங் டிம்மின்மீது இரக்கம் கொண்டதால்
(4) டாக்டர் ஆர்ம்ஸ்ராங் சாராவின் மீது இரக்கம் கொண்டதால்

( )

## B4 சொற்பொருள்

**Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)**

Q18. கனிவுடன்

(1) அக்கறையுடன்
(2) அன்புடன்
(3) பொறுமையுடன்
(4) பணிவுடன்

Q19. மாதிரியான

(1) வகையான
(2) தரமான
(3) பிரிவான
(4) தொடர்பான

Q20. நிபுனர்

(1) அறிஞர்
(2) ஆய்வாளர்
(3) வல்லுனர்
(4) இயக்குனர்

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:






# வாருங்கள்

## மண்டாய் விலங்கியல் தோட்டக் குடும்ப உறுப்பினராக சேருங்கள்

$200 கட்டணம் செலுத்தி ஓர் ஆண்டுக்கு சாதாரன விலங்கியல் தோட்ட குடும்ப உறுப்பினராக சேரலாம். கூடுதலாக $75 கட்டணம் செலுத்தி சிறப்பு விலங்கியல் தோட்ட குடும்ப உறுப்பினராக சேரலாம் .

ஜூன் 1 முதல் 10ஆம் தேதிக்குள் விண்ணப்பம் செய்பவர்களுக்கு இலவசமாக 5 விலங்கியல் தோட்ட பொம்மைகள் வழங்கப்படும்





### உறுப்பினர் சலுகைகள்

- ஒவ்வொரு குடும்பத்திலும் 4 பேர் ஆண்டு முழுவதும் இலவசமாக நுழைவு சீட்டுகளைப் பெறலாம்.
- பாதி விலை கட்டணத்தில் விலங்கு சவாரிகள் செய்யலாம்
- ஒவ்வொரு மாதமும் விலங்கியல் தோட்ட சஞ்சிகைகள் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- இலவசமாக கார் நிறுத்தும் இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைக்கலாம்.
- வார இறுதி நாட்களில் விரைவு உணவகங்களில் இலவச ஐஸ் கிரிம் வழங்கப்படும்.

### சிறப்பு உறுப்பினர் சலுகைகள்

- விலங்குகளுடன் இலவசமாக புகைப்படம் எடுத்துக்கொள்ளலாம்.
- ஒரு குடும்ப உறுப்பினர் இலவசமாக பிறந்தநாள் விழா கொண்டாடலாம். உணவு இடவசதி அனைத்தும் விலங்கியல் தோட்டத்தில் வழங்கப்படும்




*தாமதிக்காதீர்கள் ! உறுப்பினராக சேர்வதற்கும் உறுப்பினர் அட்டையை பெறுவதற்கும் குடும்ப உறுப்பினர்களின் அடையாள அட்டைகளையும் புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டு விலங்கியல் தோட்ட பதிவு அலுவலகத்திற்கு வாருங்கள். அலுவலகம் வார நாட்களில் காலை 10 முதல் மாலை 6 வரை திறந்திருக்கும்*

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. $200 கட்டணம் செலுத்தி உறுப்பினராக சேர்பவர்களுக்கு, எத்தகைய சலுகைகள் கிடைக்காது ?

(1) பாதி கட்டணத்தில் விலங்கு சவாரி செய்தல்
(2) மாத சஞ்சிகைகளைப் பெறுதல்
(3) விலங்குகளுடன் இலவசமாக புகைப்படம் எடுத்தல்
(4) சனிக்கிழமையில் விரைவு உணவகத்தில் இலவச ஐஸ் கிரிம் பெறுதல்

( )

Q22. ஜூன் 6 ஆம் தேதியன்று உறுப்பினராக சேர விண்ணப்பம் செய்பவர் அடையும் நன்மை என்ன ?

( )

(1) கரடி பொம்மைகளை இலவசமாக பெறுவர்.
(2) இலவச நுழைவுச் சீட்டுகளைப் பெறுவர்.
(3) இலவசமாக விரைவு உணவகங்களில் உணவு உண்ணும் வாய்ப்பை பெறுவர்.
(4) விலங்கியல் தோட்டத்தில் தனது பிறந்தநாளை கொண்டாடும் வாய்ப்பைப் பெறுவர்.

Q23. உறுப்பினராகச் சேர விரும்புவோர் எப்போது பதிவு அலுவலகத்திற்குச் செல்லலாம் ?

(1) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
(2) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு
(3) சனிக்கிழமை காலை 10 மணிக்கு
(4) செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு

( )

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | | | |
|---|---|---|---|
| Q24. | இரு நாட்டு மன்னர்களுக்கிடையே போர் ____________ போர் நடந்தது. அதில் பல போர்வீரர்கள் பலத்த காயம் அடைந்தனர் | Q24 | (   ) |
| Q25. | குளத்தில் பல ____________ மலர்கள் பூத்திருந்தன. பலர் அவற்றின் அழகைக் கண்டு ரசித்துக்கொண்டிருந்தனர் | Q25 | (   ) |
| Q26. | சரளாவின் ____________ பள்ளிக்கு அருகிலேயே இருக்கிறது. அதனால், அவள் தினமும் பள்ளிக்கு நடந்து வருவாள் | Q26 | (   ) |
| Q27. | என் அம்மா கத்தியால் காய்கறிகளை ____________. பிறகு அவற்றைக் கறி சமைத்தார். | Q27 | (   ) |
| Q28. | கடந்த சனிக்கிழமை கலாவும் முருகனும் ____________ புரிந்தனர் அவர்களின் பெற்றோர்கள் அவர்களை ஆசீர்வதித்தனர். | Q28 | (   ) |

| | |
|---|---|
| (1) மனை | (2) அறிந்தார் |
| (3) மணம் | (4) மனம் |
| (5) அரிந்தார் | (6) அள்ளி |
| (7) களத்தில் | (8) மணை |
| (9) அல்லி | (10) கலத்தில் |

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத்தேர்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| சிங்கம் ஒன்று காட்டு வழியே வந்து கொண்டிருந்தது. | | |
| அது சேவல் கூவும் ஒலி கேட்டால் மிகவும் ____(Q29)____. | Q29. | ( ) |
| " நான் காட்டரசனாக மிகுந்த பலத்துடன் இருந்து என்ன பயன்? ஒரு சேவல் கூவுவதைக் கேட்டு பயந்து வாழ்வது ஒரு வாழ்வா? " என்று | | |
| தனக்குத்தானே மிகவும் ____(Q30)____ கொண்டே நடந்தது. | Q30. | ( ) |
| அப்போது ____(Q31)____ ஒரு யானை மிகவும் சோர்வுடன் தனது. காதுகளைக் இருபக்கமும் வேகமாக ஆட்டிக்கொண்டே வந்தது. அதனைக் கண்ட சிங்கம், " யானையாரே, பார்த்தவர்கள் பயந்து நடுங்கும்படியான மிகப் பெரிய உருவம் கொண்ட உமக்கு என்ன | Q31. | ( ) |
| கவலை? ஏன் ____(Q32)____ வருகிறீர்கள்? " என்று கேட்டது. | Q32. | ( ) |
| " சிங்க நண்பரே, அதை ஏன் கேட்கிறீர்கள்? எனக்கு____(Q33)____ இல்லாமல் போய்விட்டது. இதோ எனது காதுகளின் பக்கத்தில் குளவி பறந்து கொண்டே இருக்கிறது. அது காதுக்குள் நுழைந்து | Q33. | ( ) |
| கொட்டிவிட்டால் அந்த ____(Q34)____ தாங்கவே முடியாது. அந்தக் குளவி காதிற்குள் நுழைந்துவிடக் கூடாதே என்ற கவலையுடன் காதுகளை ஆட்டிக் கொண்டே வருகிறேன் " என்று வருத்தத்துடன் யானை கூறியது. சிங்கம் இப்போது சிந்திக்க ஆரம்பித்தது. எத்தகைய | Q34. | ( ) |
| ____(Q35)____ உள்ள உயிரானாலும் அவைகளுக்கென்று தனியே ஒரு கவலை உண்டு.அதுதான் நமக்கும் ஏற்பட்டுள்ளது என்று உலக வழக்கத்தைப் புரிந்து கொண்டது. அன்றிலிருந்து எதற்கும் கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் சிங்கம் வாழ ஆரம்பித்தது | Q35. | ( ) |

| | | |
|---|---|---|
| (1) வாட்டத்துடன் | (2) நொந்து | (3) எதிரே |
| (4) தொலைவில் | (5) சிந்தித்து | (6) மயங்கிவிடும் |
| (7) நிம்மதியே | (8) பயந்துவிடும். | (9 குழப்பத்துடன் |
| (10) கவலையை | (11) வலியை | (12) வல்லமை |

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

அமெரிக்காவிலுள்ள பிட்ஸ்பர்க் என்னும் நகரத்தில் ஆலன் டெமிட்ரியன் என்பவர் வாழ்ந்தார். அவர் கலையம்சம் பொருந்திய சிலைகளைச் சேகரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் அச்சிலைகள் பல நாடுகளைச் சேர்ந்தவையாகும். தினமும் தமது சிற்பங்களைக் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்தார். நாள்தோறும் அவற்றைப் பார்த்துப் பார்த்து ரசித்து வந்தார். அவர் சேகரித்த சிலைகளில் மார்பளவு வடிக்கப்பட்ட ஒரு ஜப்பானிய இளம்பெண்ணின் செப்புச்சிலை அவரது கவனத்தை அதிகம் ஈர்த்தது.

அந்த சிலையின் முகபாவம் தமது வீட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப மகிழ்ச்சியாகவும் சோகமாகவும் மாறுவதுபோல் அவருக்குத் தோன்றியது. ஆனால், அதை அவரால் நம்பவும் முடியவில்லை; நம்பாமலிருக்கவும் முடியவில்லை. அந்தச் சிலையின்மீது தமக்கிருந்த ஈடுபாடுதான் தம்மை அவ்வாறு நினைக்க வைக்கிறது என்று அவர் எண்ணினார்.

ஒரு நாள் டெமிட்ரியன் தம் நண்பரிடம் சிலைகளைக் காட்டிக்கொண்டிருந்தார். அப்போது அந்த ஜப்பானிய சிலையின் கண்களிலிருந்து சொட்டுச் சொட்டாகக் கண்ணீர் வடிவதைக் கண்டார். சிலையின் முகபாவமும மிகவும் சோகமாகத் தென்பட்டது. இது அவரை திடுக்கிடச் செய்தது.

சில மணிநேரம் கழித்து வானொலியில் ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, நாகாசாகி ஆகிய நகரங்களில் அணுக்குண்டுகள் வீசப்பட்டன என்னும் பயங்கரச் செய்தி அறிவிக்கப்பட்டது. ஜப்பானில் அணுக்குண்டுகள் வீசப்பட்ட அதே நேரத்தில் சிலை கண்ணீர் வடித்திருக்கிறது. இதை அறிந்த டெமிட்ரியன் மலைத்துப்போனார். சிலையின் கண்களிலிருந்து வந்தது கண்ணீரா அல்லது எங்கிருந்தோ தெறித்து விழுந்த தண்ணீரா என்று அவர் குழம்பினார்.

இதற்கிடையில் அந்தச் சிலையைத் தம் மகளுக்குக் கொடுக்கவேண்டிய கட்டாயம் டெமிட்ரியனுக்கு நேர்ந்தது. ஒரு முறை டெமிட்ரியன் தம் மகளைக் காணச் சென்றார். அப்போது அந்தச் சிலையின் கண்களுக்குக் கீழ்ப் பச்சை நிறத்தில் ஒரு கோடு இருப்பதைக் கண்டார். சிலையின் முகத்திலும் சோகம் தவழ்ந்தது.

டெமிட்ரியன் சிலையின் கண்களுக்குக்கீழ் ஏற்பட்டிருந்த கறைக்குக் காரணத்தை அறிய முற்பட்டார். கண்ணீரில் இருக்கும் உப்பு செம்பில் படிந்ததால் அது ரசாயன மாற்றம் பெற்றுப் பச்சைக் கறையாகத் தோன்றியிருக்கிறது என்பதை ஆராய்ச்சியின் மூலம் அறிந்து வியப்படைந்தார்.

அந்தச் சிலையை, அழிவை விளைவிக்கும் போரக்கு எதிரான சின்னமாக டெமிட்ரியன் கருதினார். அவர் அந்த அதிசயச் சிலையை ஐக்கிய நாட்டுச் சபைக்கு அன்பளிப்பாக வழங்கத் தீர்மானித்தார். ஐக்கிய நாட்டுச் சபை அச்சிலையை ஏற்றுக்கொண்டது. அந்தச் சிலையின் பீடத்தில் ‘ போருக்கு எதிரான ஓர் எச்சரிக்கை’ என்ற வாசகம் ஆங்கிலத்தில் எழுதி வைக்கப்பட்டது.

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது ( 20 மதிப்பெண்கள்)

36. டெமிட்ரியன் அதிக ஈடுபாட்டுடன் மேற்கொண்ட நடவடிக்கை என்ன ? ( 3 )

37. "அதை அவரால் நம்பவும் முடியவில்லை: நம்பாமல் இருக்கவும் முடியவில்லை." என்ற தொடரில் "அதை" என்பது எதைக் குறிக்கிறது? (3)

38. எது டெமிட்ரியனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது ? ( 3 )

39. டெமிட் ரியன் ஏன் ஜப்பானிய சிலையில் காணப்பட்ட நீர்த்துளிகள் அணுகுண்டு சம்பவத்துடன் தொடர்புபடுத்தினார்? (4)

40. அ) டெமிட்ரியனின் மகளிடம் கொடுக்கப்பட்ட பின் சிலைக்கு ஏற்பட்ட மாற்றம் என்ன ? ( 2 )

ஆ) அந்த மாற்றம் எதனால் ஏற்பட்டது? ( 2 )

41. 'போருக்கு எதிரான ஓர் எச்சரிக்கை ' என்ற வாசகம் ஜப்பானிய சிலைக்கு வழங்கப்பட்டதற்கான காரணங்கள் என்ன? (3 )

# P6 PRELIMINARY TESTPAPER 6

## ANSWER KEY

| | | | |
|---|---|---|---|
| 1 | (4) | 18 | (2) |
| 2 | (3) | 19 | (1) |
| 3 | (1) | 20 | (3) |
| 4 | (2) | 21 | (2) |
| 5 | (4) | 22 | (4) |
| 6 | (4) | 23 | (2) |
| 7 | (3) | 24 | (7) |
| 8 | (2) | 25 | (9) |
| 9 | (1) | 26 | (1) |
| 10 | (2) | 27 | (5) |
| 11 | (4) | 28 | (3) |
| 12 | (2) | 29 | (8) |
| 13 | (3) | 30 | (2) |
| 14 | (3) | 31 | (3) |
| 15 | (4) | 32 | (1) |
| 16 | (2 | 33 | (7) |
| 17 | (2 | 34 | (11) |
| | | 35 | (12) |

| | |
|---|---|
| 36 | டெமிட்ரியன் பல நாடுகளைச் சேர்ந்த கலையம்சம் பொருந்திய சிலைகளைச் சேகரித்தார். நாள்தோறும் தமது சிலைகளைக் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்தார். |
| | |
| 37 | அதை என்ற சொல் அந்த சிலையின் முகபாவம் வீட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப மகிழ்ச்சியாகவும் சோகமாகவும் மாறுவதைக் குறிக்கிறது. |
| | |
| 38 | ஜப்பானிய சிலையை தன் நன்பரிடம் காட்டிக்கொண்டிருந்தபோது அதன் கண்களிலிருந்து சொட்டுச் சொட்டாகக் கண்ணீர் வடிவதைக் கண்டார். சிலையின் முகத்திலும் சோகம் தோன்றியது. இது அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. |
| | |
| 39 | வானொலியில் ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, நாகாசாகி ஆகிய நகரங்களில் அணுக்குண்டுகள் வீசப்பட்டன என்னும் பயங்கரச் செய்தி அறிவிக்கப்பட்டது. ஜப்பானில் அணுக்குண்டுகள் வீசப்பட்ட அதே நேரத்தில் சிலை கண்ணீர் வடித்திருக்கிறது. |
| | |
| 40 | அ.) டெமிட்ரியனின் மகளிடம் கொடுக்கப்பட்டபின் சிலையின் கண்களுக்குக் கீழ்ப் பச்சை நிறத்தில் ஒரு கோடு தோன்றியது.<br>ஆ.)கண்ணீரில் இருக்கும் உப்பு, செம்பில் படிந்ததால் அது ரசாயன மாற்றம் பெற்றுப் பச்சைக் கறையாகத் தோன்றியிருக்கிறது. |
| | |
| 41 | ஜப்பானிய சிலை அழிவை விளைவிக்கும் போரக்கு எதிரான சின்னமாக டெமிட்ரியன் கருதினார். அவர் அந்த அதிசயச் சிலையை ஐக்கிய நாட்டுச் சபைக்கு அன்பளிப்பாக வழங்கத் தீர்மானித்தார். |

(அடுத்த பக்கம் பார்க்க)